# **<u>IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.169/2002**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 12.02.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சித்ரா Husband Name : துரைசாமி

துவக்க நேரம்: 11.35A.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1) கடந்த 04.12.1932 (பி.வா.த.சா.ஆ-15) மற்றும் 23.02.1948 (வ.த.சா.ஆ.-9) தேதியிட்ட ஆவணங்களுக்கு எனக்கோ, மணிவேலன் என்பவருக்கோ வேறு மூல பத்திரங்கள் இல்லை என்றால் சரிதான். ஆனால் அனுபவப்படி சொத்து எங்களுக்கு உரிமையானது. அனுபவத்திற்காக எனது பெயரிலுள்ள பட்டாவும், எனக்கு கிரையம் கொடுத்த துரைசாமி என்பவர் பெயரில் உள்ள பட்டாவும், தவிர வேறு எந்த மூல ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) எனது மூலப்பத்திரம் 23.02.1948 (வ.த.சா.ஆ-9) தேதியிட்ட ஆவணத்தில் கண்டுள்ளபடி சொத்து விவரத்தின் செங்குபந்தி, எனது ஓட்டு வில்லை மனைக்கும் மேற்கு, கூரை வீட்டுக்கும் மேற்கு, அரசன்குடி வேலாயுதம் மனைக்கும் வடக்கு, மேற்படி ஓட்டு வில்லை மனைக்கும் கிழக்கு இதன் மத்தியில் கிழமேல் காலடி அளவு 20, தென்வடல் காலடி அளவு 39 என்றால் சரிதான்.

3) கடந்த 23.02.1948 பத்திரத்தின்படி எனது சொத்துக்கும் மேற்கில் மற்றும்

தெற்கில் வாதிக்கு சொத்து உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 04.12.1932 (பி.வா.த.சா.ஆ-15) மற்றும் 23.02.1948 (வ.த.சா.ஆ.-9) பத்திரங்களை மீறி கடந்த 1999-ல் நான் கிரையம் வாங்கியது செல்லாது என்றால் சரிதான். கடந்த 1932 மற்றும் 1948 ஆகிய இரண்டு பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்களை தவிர துரைசாமி என்பவருக்கு இல்லை என்றாலும் வேறு சொத்துக்களில் அவர் அனுபவத்தில் இல்லை என்றாலும் மேற்கண்ட இரு ஆவணம் கண்டுள்ள சொத்துக்கள் தவிர அதிகமான சொத்துக்களை எனக்கு 1999-ல் கிரையம் கொடுக்க முடியாது என்றாலும் அதனை நான் கிரையம் பெற உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. உரிமை இல்லாத சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் வாதிக்கு உரிமையுள்ள சொத்தை சேர்த்து கிரையம் பெற்றுவிட்டு வாதியை ஏமாற்றும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்யும்பொழுது நான் ஆள்பலத்தாலும், பணப்பலத்தாலும் வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை, இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில் தாக்கல் செய்துள்ள பதிலுரை, இவ்வழக்கில் முதலில் நீதிமன்ற ஆணையர் நியமிக்க வேண்டி தாக்கல் செய்த மனுவின் பதிலுரை, பின்னிட்டு மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்த மனுவின் பதிலுரை, நீதிமன்ற ஆணையர் மனுவின்பேரில் மேல்முறையீடு செய்தபொழுது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மேற்கண்ட எந்த பதிலுரையிலும் அனுபவத்தின் அடிப்படையில் எனக்கு துரைசாமி என்பவர் கிரையம் கொடுத்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையிலும் துரைசாமி என்பவருக்கு எனக்கு கிரையம் கொடுத்த சொத்து அவரது அனுபவத்தில் இருந்ததாக

நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரை, கூடுதல் பதிலுரை, எதிருரைகள் ஆகியவற்றில் உள்ள சங்கதிகள் அனைத்தும் தெரியும் என்றாலும் தற்பொழுது வழக்கு எனக்கு பாதகமாக அமையும் என்பதால் வேண்டுமென்றே வழக்கிற்காக தெரியாது என்று உண்மைக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்து வாதிக்கு ஆதியில் பூர்வீக குடும்ப சொத்து என்றாலும் அதன்பின்னிட்டு வாதியின் பெயருக்கு டி கார்டு மூலமாக வழங்கப்பட்டுள்ளது என்றாலும் இந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் தெரிந்துக்கொண்டே, டி கார்டு வழங்கியதற்கு பின்னிட்டு கடந்த 1999-ல் வழக்கு சொத்தில் ஒரு பகுதியினை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் அது செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

7) வாதியின் பெயருக்கு வழங்கப்பட்ட டி கார்டு இன்றுவரை அமலில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கியபொழுது சொத்தை அளந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. அளந்துதான் வாங்கினேன். கடந்த 1932 மற்றும் 1948 தேதியிட்ட பத்திரங்களின் அடிப்படையில் சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் பட்டா மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் அளந்துவிட்டார்கள். கடந்த 1932 மற்றும் 1948 ஆகிய பத்திரங்களின்படி சொத்தை அளந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. அளந்துதான் வாங்கினேன்.

8) வாதி பெயரில் உள்ள டி கார்டு கடந்த 1996-ம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எங்கள் சொத்துக்குண்டான ஆவணங்களை கொடுத்தார்கள். வழக்கு சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி அனுபவத்தில் உள்ள சொத்து விவரம் தெரியும். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னுடைய சொத்தை அவரது சொத்து என்று வழக்கு

போட்டுள்ளார். என்ன காரணத்திற்காக இந்த வழக்கை போட்டுள்ளார் என்றால் பொறாமையால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

9) நான் சொத்தை கிரையம்பெறும்பொழுது சொத்தை அளந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான், வாதி மற்றும் ஊர்காரர்கள் முன்னிலையில், மணியகாரரை வைத்து அளந்துதான் வாங்கினேன். இந்த சங்கதியை என்னுடைய எதிருரையிலும், பதிலுரையிலும் எவ்விடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியவில்லை.

10) நான் கிரையம்பெற்ற சொத்தை, வாதி, ஊர்காரர்கள், மணியக்காரர்கள் ஆகியோர் முன்னிலையில் சொத்தை அளந்து பார்த்து வாங்கினேன் என்று நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் சொத்தை அளந்து வாங்கியிருந்தால் அந்த தகவலை வழக்கில் சொல்லியிருப்பேன் என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

11) நான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால்தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. IA. No.749/2002-ல் என்ற இடைக்கால மனுவில் இடைக்கால உத்தரவு வாதிக்கு சாதகமாக வழங்கப்பட்டிருந்த நிலையில் வாதிக்கு சொந்தமான சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12) இவ்வழக்கு நிலுவையில் இருந்தபொழுது, இவ்வழக்கில் இடைக்கால உத்தரவு வாதிக்கு சாதகமாக வழங்கபட்டிருந்த நிலையில், முதன்முறையாக நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட வருவதற்கு முன்பாகவே நான் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து அடித்தளம் ஏற்படுத்தியுள்ளேன்

என்றாலும் சரியல்ல. என்னுடைய இடத்தில்தான் கடக்கால் போட்டேன்.

13) இவ்வழக்கில் இடைக்கால உத்தரவு வாதிக்கு சாதகமாக இருந்த நிலையில், வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டுவிட்டு வந்த பிறகு நான் வழக்கு சொத்தின் ஒரு பகுதியான ஆக்கிரமிப்பு பகுதியில் கடக்காலில் அதிரடியாக வீடு கட்டி, வீடு திறப்பு விழா செய்தேன் என்றால் வீடு கட்டியது உண்மைதான். என்னுடைய இடத்தில் வீடு கட்டியுள்ளேன்.

14) கடந்த 2 வருடத்திற்கு முன்பாக மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் கடந்த 07.02.2023 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய ஆணையரின் அறிக்கைப்படி, நான் தாவா சொத்தில் 14 1/2 அடி யை ஆக்கிரப்பு செய்து, நான் வீடு கட்டியுள்ளதாக ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறான அறிக்கை ஆகும்.

15) ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் தவறானது என்று நான் சொ்லுலும் பட்சத்தில் அதனை நீக்கம் செய்ய நான் மனுதாக்கல் ஏதேனும் செய்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் தவறானது என்று நான் சொல்லும் நிலையில், புதியதாக ஆணையரை நியமிக்க நான் ஏதேனும் மனுதாக்கல் செய்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

16) ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தின்படி, தாவா சொத்தில் நான் 14 1/2 அடியை ஆக்கிரப்பு செய்துள்ளதால் அதனை நான் மீண்டும் வாதிக்கு திருப்பி கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அது என்னுடைய சொத்து, அதில்தான் நான் வீடு கட்டியுள்ளேன். நான் இதுநாள் வரை நீதிமன்ற உத்தரவை

மதிக்காமல், நியாத்தையும், தர்மத்தையும் பார்க்காமல், ஆள்பலத்திலும், பண பலத்திலும் வாதிக்கு சொந்தமான தாவா சொத்தில் ஒரு பகுதியை ஆக்கிரப்பு செய்து, வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தில்தான் நான் வீடு கட்டியுள்ளேன்.

17) முத்துசாமி மகன் பெரியசாமி உடையார் என்பவரின் பெயரில் உள்ள பட்டா(பி.வா.சா.ஆ.14) போலியானது என்றாலும், இந்த பட்டா போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த பட்டா செல்லத்தக்கதல்ல என்றாலும், இந்த பட்டா வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும், இந்த பட்டா சட்டபூர்வமான ஆவணம் அல்ல என்றாலும் சரியல்ல.

18) நான் என்னுடைய பெயரில் பெற்றுள்ள பட்டா((பி.வா.சா.ஆ.1) உண்மையானது அல்ல என்றாலும், செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வட்டாச்சியர் அவர்களிடம் ஆவணங்களை கொடுத்து, முறையாகதான் பட்டா பெற்றுள்ளேன். இது உண்மையான பட்டாதான். இந்த பட்டாவில் பெற்றுள்ள நாற்புற அளவுகள் தவறானது என்றாலும், அதனால் இந்த பட்டா செல்லத்தக்கதல்ல என்றாலும், வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

19) பட்டா (பி.வா.சா.ஆ.14) வில் கண்டுள்ள நாற்புற எல்லைகளில், வடக்கு பக்கம் காலி இடம் என்று கூறியிருப்பது தவறு என்றாலும், வடபுறம் ராஜவீதி மட்டும்தான் உள்ளது என்றாலும், எனவே, இந்த பட்டா நாற்புர எல்லைகள் சரியாக குறிப்பிடாமல் வழங்கப்பட்டுள்ளதால் இந்த பட்டா செல்லத்தக்கதல்ல என்றால் இந்த பட்டா செல்லத்தக்கதுதான். இது அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. நான் இருக்கும் இடத்திற்குதான் இந்த பட்டா வழங்கப்பட்டுள்ளது. நாற்புர எல்லையின் வடபுறத்தில் ராஜவீதிதான் உள்ளது.

20) பட்டா(பி.வா.சா.ஆ.14) அடிப்படையில்தான், பட்டா (பி.வா.சா.ஆ.1)நான் எனது பெயரில் வாங்கியுள்ளேன் என்றாலும் துரைசாமி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவே செல்லத்தக்கதல்ல என்ற நிலையில், அதன் பேரில் என் பெயரில் வாங்கப்பட்ட பட்டாவும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டா (பி.வா.சா.ஆ.1), பட்டா (பி.வா.சா.ஆ.2) ஆகிய இரு ஆவணங்களிலும், கிழமேல்,தென்வடல், நீள - அகலம் குறிப்பிட்டு வழங்கப்படவில்லை என்றால் தெரியவில்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர், சாட்சி அனைத்து கேள்விகளுக்கும் வேண்டுமென்றே சிந்தித்து சிந்தித்து "தெரியாது" என்று பதிலளிப்பதை பதிவு செய்ய வேண்டினார். பதிவு செய்யப்படுகிறது. )

21) பட்டாக்கள் (பி.வா.சா.ஆ.1,2) ஆகிய இரு ஆவணங்களும் வழக்கிற்கு பின்னிட்டு பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் இரு ஆவணங்களும் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள்தான். ஆனால் அது பொய்யான ஆவணங்கள் இல்லை. உண்மையான ஆவணங்கள்தான்.

22) இந்த வழக்கு கடந்த 2002 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு, கடந்த 27.11.2023 ஆம் தேதியில்தான் பட்டாக்கள் (பி.வா.சா.ஆ.1,2) ஆகியவற்றை சுமார் 20 ஆண்டுகள் கழித்து, இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. பட்டாக்கள் (பி.வா.சா.ஆ.1,2) ஆகியவை என்னுடைய கையில் இல்லை என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக ஒரு பட்டாவை பழைய தேதியிலும், ஒரு பட்டாவை பின்னிட்ட தேதியிலும் தயாரித்து, தற்பொழுது வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

23) பட்டாக்கள் (பி.வா.சா.ஆ.1,2) இந்த இரு ஆவணங்களும் என்னுடைய கையில் 2002 முதல் 2023 ஆம் ஆண்டுகளில் என்னுடைய கையில் இருந்திருந்தால் அதனை நான் எப்பொழுதோ இந்நீதிமன்றத்திலும்,உயர்நீதிமன்றத்திலும் தாக்கல்

செய்திருப்பேன் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக இந்த இரு பட்டாக்களையும் தயாரித்து, தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

24) வீட்டு வரி ரசீதுகள் (பி.வா.சா.ஆ.3 முதல் 6) ஆகிய ஆவணங்கள் என்னுடைய வீட்டிற்குண்டான வரி ரசீதுகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரி ரசீது ( பி.வா.சா.ஆ.3) 2012 -2013 ஆம் ஆண்டிற்கான வரிரசீது என்றால் சரிதான். மற்ற 3 வரிரசீதுகளும் (பி.வா.சா.ஆ.4 முதல் 6) மேற்படி 2012-2013 ஆம் ஆண்டின் வரிரசீதிற்கு பின்னிட்ட வரிரசீதுகள் என்றால் ஆமாம். வீட்டு வரி ரசீதுகளில் வீட்டின் அளவு குறிப்பிட்டு வழங்கப்படவில்லை என்றால் அளவு குறிப்பிட்டு வரிரசீது வழங்கமாட்டார்கள். வரி ரசீதுகள் ( பி.வா.சா.ஆ.3 முதல் 6) வழக்கிற்கு பின்னிட்டு வழங்கப்பட்டுள்ளன என்றால் சரிதான்.

25) புதுமனை புகுவிழா அழைப்பிதழ் ( பி.வா.சா.ஆ.7) ஆவணத்தில், கடந்த 04.06.2003 ஆம் தேதியில் வீடு திறப்பு விழா செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு வீடு திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியின் தாவா சொத்திற்கு பாத்தியப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் என்னுடைய சொத்திற்கு சம்பந்தப்பட்டது. வாதி சொத்திற்கு சம்பந்தமில்லாதது.

26) வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியானது என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், எனவே, வாதிக்கு பாத்தியப்பட்ட ஆணையர் அறிக்கையில் கண்டுள்ள, என்னால் ஆக்கிரப்பு செய்யப்பட்டுள்ள கிழமேல் 14 1/2 அடி, தென்வடல் 11 மீட்டர் அளவில் உள்ள இடத்தினை வாதிக்கு திருப்பிக்கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அது என்னுடைய இடம் கொடுக்கமுடியாது.

27) வாதிக்கு சேரவேண்டிய சொத்தினை நான் ஆக்கிரப்பு செய்துக்கொண்டு, தவறான மற்றும் பொய்யான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து,வாதிக்கு எதிராக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.31 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

(Sd/- S. Munusamy)
Principal Distrit Munsif, Attur.

- O.S. No. 169/2002, Dt.12.02.2025.